MRs Indrani Dr Savita Book Review

by: R. Pattabiraman

இந்திராணி ஜெகஜீவன்ராம்

சவீதா அம்பேத்கர்

நூல்கள்- மதிப்புரை

இந்திராணியின் Milestones, டாக்டர் சவீதாவின் My Life with Dr Ambedkar ஆகிய நூல்கள் வாசிப்பவர்க்கு ஆர்வமூட்டலாம். எப்படி அம்பேத்கர் துணைவியார் டாக்டர் சவீதா (சாரதா கபீர்) நூல் சுவாரஸ்யமானதோ, அதே போல் இந்திராணி அவர்களின் நூலும் வாசிக்க சுவாரஸ்யமானதும், அரசியல் போக்குகளை அவர் புரிந்த கோணத்தில் சுட்டிக்காட்டுவதாகவும் இருக்கும்.

இந்திய அரசியலில் விடுதலைக்கு முன்னரும், பின்னரும் அரசியல் ஆளுமைகளாக இருந்தவர்களின் துணைவியார்களாக அவர்கள் எழுதியிருப்பது முக்கிய பதிவுகளில் இடம் பெறத்தக்கவைதான். அப்பெண்களால் சொல்ல முடியாதவை என ஏராளம் இருக்கலாம்.

டாக்டர் சவீதாவிற்கு மணவாழ்க்கை 8 ஆண்டுகள் என்ற அளவில்தான் கிட்டியது. அதில் கிடைத்த , சொல்ல முடிந்தவைகளை அவர் சொல்லியிருப்பார். இந்திராணிக்கு ஜெகஜீவனின் நீண்டகால வாழ்க்கை அனுபவங்களை பார்க்க முடிந்துள்ளது. அவரும் சொல்லக்கூடியவற்றை மட்டுமே சொல்லியிருக்க முடியும்.

இரு பெண்களும் தங்கள் ஆளுமை மிக்க கணவர்களுடன் இந்திய வாழ்க்கைப் பயணத்தில் துடுப்பைப் போட்ட சிறிய கணங்கள் அவர்களின் பதிவுகளில் நமக்குக் கிட்டும்.

இந்நூல்களை வாசித்து இரு ஆண்டுகள் ஆகியிருக்கும். முக நூலில் மேய்ந்தபோது, மீளக் கிடைத்த இடுகைகளை இங்கு கொடுத்துள்ளேன். ஆர்வம் உள்ளோர் வாசித்து பார்க்க வேண்டுகிறேன். சிறு வெளியீடுதான்.

ஆர். பட்டாபிராமன்

3-7-2025

இந்திராணி ஜெகஜீவன்ராம்

சுயசரிதைகள் சுவையானதாகவும் செய்திகளைத் தரக்கூடியதாகவும் இருக்கும். சில நேரம் நல்ல அனுபவமாக இருக்கிறதே எனக்கூடத் தோன்றும். அடுத்தவர் வாழ்க்கையை எட்டிப்பார்க்கும் மனோபாவம் இருக்கத்தானே செய்கிறது.

திருமதி இந்திராணி ஜெகஜீவன்ராம் தன் வரலாறு நினைவுக் குறிப்புகள் ஆங்கிலத்தில் Milestones என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. வந்து மாமாங்கம் ஆகிறது. இந்தியில் 1990களில் மூன்று வால்யூம்களாக அவை இந்தியர்களுக்கு கிடைக்கப்பெற்றன. ஆங்கிலத்தில் 300 பக்கங்களில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது . பெங்குவின் இந்தியா கொணர்ந்துள்ளனர். மகள் புகழ்வாய்ந்த மீராகுமார் சிறிய முன்னுரை எழுதியுள்ளார்.

1946 லிருந்து மிக உயர்ந்த அதிகார ஆட்சிமுறை வீட்டின் பெண்மணி என்கிற வகையில் இந்திய அரசியலின் நுணுக்கங்களை- அதன் மேடு பள்ளங்களை நன்கு அறிந்தவராகவே இந்திராணி அம்மையார் இருந்திருப்பார். எதைச் சொல்லலாம் - கூடாது என்பதில் அவருக்குள் போராட்டம் நடந்திருக்கும்.

பாபுஜி என அழக்கப்பட்ட ஜெகஜீவன் வாழ்க்கையில் சக தோழியாக, இந்திய விடுதலைப் போரின் கட்டங்கள், காந்தி படுகொலை, ஜெகஜீவன் பல்வேறு துறை அமைச்சர் அனுபவங்கள், பாகிஸ்தான் மற்றும் சீன போர், நேருவின் மறைவு என பல்வேறு விஷயங்களை இந்திராணி தன் நினைவுகளிலிருந்து பேசுகிறார். ஜெகஜீவன் மறைந்த பின்னர் 15 ஆண்டுகள் வாழ்ந்து தனது 91 ஆம் வயதில் வாழ்வை நீத்தவர் இந்திராணி.

அவரது வாழ்வின் இளம் பகுதியிலிருந்து…

1900த்தின் ஆரம்ப ஆண்டுகளின் சாதிய ஏற்றத்தாழ்வின் வெம்மையை உணர்ந்தே இந்திராணியின் கல்வி வாழ்க்கை கடந்தது. 1850 களின் காலத்திய தந்தையார் பீர்பால்தாஸ் - பிரிட்டிஷ் ஆசிரியர் மற்றும் இங்கிருந்த சில நல்லாசிரியர்கள் துணையுடன் கல்விக்கூடம் நுழைந்ததுடன் இராணுவ டாக்டரின் உதவியுடன் மருத்துவம் தேர்ச்சி பெற்று கான்பூரில் டாக்டர் தொழிலை நடத்தலானார். ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இராணுவ மருத்துவராக இருந்த அனுபவம் உதவியது.

துசியாஸ் (dhusias) என்கிற துணைச்சாதி ஒன்றில் பிறந்த பூர்வீக குடும்பமது. துசியாஸ் பொதுவாக தோல் தொழில், விவசாயக் கூலிகளாக இருந்தனர். பீர்பால் கல்வியின் அவசியத்தை குழந்தைகளுக்கு உணர்த்தினார். பெண்களை கல்வி கற்க அனுப்பினார். வீட்டில் உருது சமஸ்கிருதம் கற்க வைத்தார். பெண் குழந்தைகள் காயத்ரி சொல்லின. ஆரிய சமாஜம் பீர்பாலை அரவணைத்தது. பீர்பால் அவ்வூரின் அனாதை குழந்தைகளுக்கென தனி விடுதி உருவாக்கி , கல்வி கற்க வைத்தார். அனாதையான பிராமண, சத்திரிய குடும்ப குழந்தைகள், பீர்பால் வீட்டு குழந்தைகளுடன் தங்க வைக்கப்பட்டனர்.

டிஸ்பென்சரியிலிருந்து பீர்பால் இரவு 9 மணிக்கு வரும்போது, அனைத்து குழந்தைகளுக்கும் தினம் பழங்கள் கிடைக்கும்.

கான்பூரில் இந்திராணி சாதி அறிந்த அந்த பலிகா வித்யாலயா உயர்நிலைப்பள்ளி சேர்க்க மறுத்தபோது, லக்னோ பள்ளியில் விடுதியில் சேர்த்து படிக்க வைத்தனர். இந்திராணி உட்பட மாணவிகளுக்கு பிராமண சமையல் அம்மாவும், பாத்திரம் சுத்தம் செய்ய சாதி இந்து அம்மாவும் இருந்தனர். இந்திராணி சாதி தெரிந்தவுடன் அவர் தட்டை சுத்தம் செய்ய முடியாது என்ற நிலை உருவானது. சக மாணவிகள் உடன் அமர்ந்து உணவு எடுத்துக்கொள்ள மறுத்தனர்.

ஆங்கிலோ இந்திய வார்டன் மாது இந்திராணி பக்கம் நின்றார். பின்னர் நிலைமைகள் சரியாகி, பிராமண பெண்கள் நல்ல தோழிகளாகினர். இந்திராணி உடல் நலம் பாதித்த போது, அவளுக்கு பதில் என்னை எடுத்துக்கொள் கடவுளே என வேண்டும் அளவிற்கு நட்பின் ஆழம் சென்றது.

பீர்பால் ஏராளம் சம்பாதித்தார். பல முதலீடுகள் நட்டமாயின. மகனுக்கு கொடுத்த நிதிகளும் முடங்கி , 70 ஆம் வயதுகளில் பணம் இல்லாமல் குடும்பம் கஷ்டத்திற்கு உள்ளானது. அம்மா சைதன்ய தேவி சமாளித்தார். மூத்த பெண் மட்டுமே திருமணமான நிலை. அண்ணன், அப்பா, அம்மா என இறப்புகள் நேர அக்கா மற்றும் அவரது கணவரின் பராமரிப்பில் இந்திராணி வந்தார். ஆசிரியப்பணி கிட்டியதால் குடும்பத்தை சமாளிக்க முடிந்தது.

மற்றொரு சகோதரி பாரத்தை நீக்க கொடுமைக்கார குடும்பம் ஒன்றில் தன்னை ஒப்படைப்பு செய்துகொண்டார். இச்சூழலில்தான், காங்கிரஸ்

முழுநேர ஊழியர் ஜெகஜீவன் ராமை இந்திராணிக்கு பார்க்கலாம் என உறவுக்காரர் சொல்லி திருமண பேச்சுவார்த்தை நடந்தது.

சந்த்வா கிராமம் போகவேண்டுமெனில் காலையில் இரயில் ஏறினால் மாலையில் போகலாம். நகைநட்டு போட்டு திருமண பழக்கம் இல்லை என ஜெகஜீவன் குடும்பத்தார் தெரிவித்தனர். மாப்பிள்ளை கல்வித்தகுதி என்ன என இந்திராணி குடும்பம் கேட்டது. அதற்கு ஜெகஜீவன் நான் வேலைக்கு விண்ணப்பிக்கவில்லை. பயோடேட்டா எதற்கு என்றாராம். ஒரு வழியாக திருமணம் ஜூன் 1, 1935 ல் நடந்து புதிய உலகத்திற்கு , கிராமத்திற்கு நகர வாழ்க்கையின் இந்திராணி வந்து சேர்கிறார். குடும்பத்தார் அன்புடன் நடத்துகின்றனர்.

கொந்தளிப்பான அரசியல் சூழல்களில் ஈடுபட்ட கணவனுடன் இந்திராணி எப்படி சக பயணியாக வாழ்ந்தார் என்பதை வாய்ப்பு உள்ளபோது அடுத்து பார்க்கலாம்.. (nov 25 2023)

Milestones-இந்திராணி ஜெகஜீவன்ராம் -2

திருமதி இந்திராணி அம்மையார் தனது வாழ்க்கை குறித்த நினைவுக்குறிப்புகளில் இந்திய விடுதலைபோராட்டக் காலத்தின் சில கட்டங்களையும் சொல்லியே நகர்கிறார்.

ஜெகஜீவன் கல்விச் சூழலில் தீண்டாமை எதிர்த்து போராடியது, ரவிதாஸ் இயக்கம் தொடங்கி இளைஞர்களை அணிதிரட்டியது, இந்து மகாசபை மாநாடுகளில் தலித் மக்களின் நலனுக்கான தீர்மானங்களை கொணர்வது , முனிசிபல் மற்றும் 1935 சட்டப்படியான தேர்தல்களில் பாபு ஜெகஜீவன் பங்கேற்றது குறித்து இந்திராணி சொல்லிச் செல்கிறார்.

ஜெகஜீவன் குடும்பத்தில் தாயாரும் அண்ணிமாரும் துளசிதாசர் பஜன்களை ஊராருடன் பாடுவது, பக்தி மார்க்கத்தில் ஈடுபாட்டுடன் இருந்ததைக் குறிப்பிடுகிறார்.

வட்டமேஜை மாநாடு துவங்கி 1937 காங்கிரஸ் வெற்றி -அமைச்சரவை காலத்தில் அவர் பதிவு செய்த மூன்று முக்கிய அம்சங்களை இங்கு தந்துள்ளேன். காந்தியுடன் பிரசாத் வழியாக பயணித்தல், காந்தியுடன் வேறுபாட்டை சொல்தல், அம்பேத்கருடன் முரண்படுதல் அவரை சந்தித்து இணக்கமாதல், பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் இணங்குவதா முரண்படுவதா போன்ற அம்சங்களில் இந்திராணி பதிவை தந்துள்ளேன்.

பிரிட்டிஷ் பிரதமராக இருந்த ராம்சே கொடுத்த 1932 கம்யூனல் அவார்ட், அதில் தனித்தொகுதி என்பது depressed class பகுதியை இந்துக்களிடமிருந்து பிரித்துவிடும் என்பதற்கான காரணங்களைச் சொல்லி காந்தியின் உண்ணாவிரதம், புனே உடன்பாடு ஆகியவற்றை இந்திராணி சொல்கிறார். அவர் தன் பதிவை கீழ்கண்டவாறு தந்துள்ளார்.

The British backed him (dr Ambedkar) against Gandhi in order to spread disunity in the nationalist movement, but the general public was highly agitated. Gandhiji was a symbol of freedom for the common man.

அடுத்து ஜெகஜீவன் அறிக்கை ஒன்றை சுட்டும் பதிவு

The All India Dalit Varga Sangh had gained prominence as a representative of Harijan body. Dr Ambedkar felt that it had become a challenge to his leadership.Jagajivan said

that it is sad that a brilliant person like Dr Ambedkar is separating from Dalit varga movement, but we are happy that Hindu society will not be divided.

ஜெகஜீவன் புனேயிலிருந்து பம்பாய்க்கு அம்பேத்கரை பார்க்கப்போனார். பரஸ்பர மரியாதையுடன் உரையாடல் இருந்தாலும், இந்து மதத்திலிருந்து மாறவேண்டிய அவசியத்தை அம்பேத்கர் வலியுறுத்தினார். தலித் பிரச்சனைகளை மதமாற்றத்தால் தீர்க்கமுடியாது என்கிற தன் முடிவை ஜெகஜீவன் தெரிவித்து திரும்பியதாக இந்திராணி எழுதியுள்ளார் (பக் 51)

இங்கு இந்திராணி எழுதியிருக்கும் மற்றொரு வரி

Dr Ambedkar’s call for conversion made him the centre of attraction in the entire Indian social set up. (nov 29 2023)

Milestones இந்திராணி-3

Milestones இந்திராணி ஜெகஜீவன்ராமின் நினைவுகள் போன்ற புத்தகங்கள் விடுதலைக்கு பின்னரான நவீன இந்திய அரசியலின் நுட்பங்களை புரிந்துகொள்வதற்கு பயன்படலாம்.

எதை இந்திராணி போன்றவர் வெளிப்படுத்த முடிகிறது, எங்கு அவர்கள் மௌனமாகி போகின்றனர் என்பதை கவனப்படுத்திக்கொள்ளமுடியும். அடித்தட்டில் சிறு கிராமத்திலிருந்து உயர் அதிகாரம், சொகுசு தோரணைகளுக்கு செல்பவர்களின் பிம்பங்களும் அவர்கள் உளவியல் பாடுகளும் இந்நூல் போன்றவற்றில் ஓரளவிற்கு கிடைக்கும்.

இந்திராணி , கணவனே கண்கண்ட தெய்வம்- மாமியாரை மெச்சும் மருமகள் என்ற பிம்பத்தை எனக்குத் தருகிறார். நேரு கால காபினட்டிலிருந்து இந்திரா கால வங்கதேச உதயம் வரையிலான காலம் இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. நிகழ்ந்த அத்துனை நல்லதிலும் ஜெகஜீவன் பங்கு, பங்கே விதந்து பேசப்பட்டுள்ளது. ஜெகஜீவனுக்கு சோதனை என்றால் அவையெல்லாம் சதிகளாக, பொறாமை பொச்சரிப்புகளாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜெகஜீவன் பீகாரின் கிராமத்திலிருந்து டெல்லியின் உயர் ஆட்சி அதிகாரத்தின் பெருவெளிகளைக் கண்டவர். அரசியலில் விளைந்து நின்றவர். பாபு ராஜேந்திரபிரசாத்தின் நம்பிக்கைக்குரியவராக இருந்தவர். காங்கிரசின் மேல்தட்டு விவகாரங்களை அவர் மூலம் பார்த்தவர். தொழிலாளர் அமைச்சராக , விவசாய அமைச்சராக, தகவல் தொடர்பு, போக்குவரத்து, ரயில்வே, பாதுகாப்பு என பல்வேறு இலாகாக்களின் நுட்பங்களை அறிந்தவர். சிலநேரம் radical toneகளை வெளிப்படுத்தியவர்.

காமராஜரின் கே பிளானால் ஜெகஜீவன் பழிவாங்கப்பட்டார் என்ற உணர்வை இந்திராணி வெளிப்படுத்தியுள்ளார். நேரு மறைவிற்கு பின்னர் லால்பகதூர் அமைச்சரவையில் 20 ஆண்டுகளுக்கு முன்பே அவர் பெற்ற அதே தொழிலாளர் துறை தரப்பட்டபோது அவரது மனைவி, மகள் மீரா, மகன் சுரேஷ் கோபமடைந்தனர். மொரார்ஜியைவிட தான் சீனியர் என்ற உணர்வு நியாயமாகவே ஜெகஜீவனிடம் இருந்தது.

சிண்டிகேட் இந்திரா காங்கிரஸ் என்கிற பிளவு வந்தபோது, மொரார்ஜியா இந்திராவா என வெளிப்படையாக நிற்காமல் ஜெகஜீவன் இருந்தார் என்கிற சந்தேகம் இருபக்கமும் இருந்தது. இந்திரா சாதுர்யமாக ஜெகஜீவனை இழுத்துவிட்டார் என்பதை இந்திராணி எழுத்துக்கள் காட்டும். குடியரசு தலைவர் தேர்வு குறித்து காங்கிரஸ் கமிட்டி விவாதித்தபோது ஜெகஜீவன் பெயரை இந்திராகாந்தி முன்மொழிந்தார். மொரார்ஜி எதிர்த்ததை இந்திரா சாதகமாக்கிக்கொண்டார். அத்தேர்தலில் வி வி கிரியை வெற்றிபெறவும் வைத்தார். உடைந்த காங்கிரசின் இந்திரா பிரிவின் அகில இந்திய தலைவராக ஜெகஜீவன் ஆக்கப்பட்டார். இந்திரா காங்கிரஸ் என பொதுவாக அறியப்பட்ட ஒன்றை ஜெகஜீவன் காங்கிரஸ் என இந்திராணி எழுதியுள்ளார்.

மாடு கன்று சின்னம் கூட தன் மகன் சுரேஷ் சொல்லி, காங்கிரஸ் சின்னமானதாக இந்திராணி செய்தி தருகிறார். வங்கதேச விடுதலைக்கான - அகதிகள் சமாளிப்பு பெயரிலான யுத்தத்தின் போது ஜெகஜீவன் பாதுகாப்பு அமைச்சர். அந்த வெற்றிக்கு பின்னரான அரசியல் சாதுர்யத்தை தன் கணவர் அற்புதமாக வெளிப்படுத்தியதாக, வங்க விடுதலைக்கு காரணமாக இருந்ததாகவும் இந்திராணி பதிவு சொல்கிறது.

1972 உடன் இந்த ஆங்கில மைல்ஸ்டோன் பதிவை நிறுத்திவிட்டனர். இந்நூலுக்கு முன்னுரை எழுதிய மீராகுமார் கீழ்கண்ட வரிகளை எழுதியுள்ளார்.

The unpublished script, apart from offering insight into other events, also gives an insider’s account of the Emergency and the subsequent events that changed the course of India’s political history. Babuji was keen that Ma’s work be published in English as well

இந்த நூலை படித்தபோது எனக்கு தோன்றிய உணர்வு- ஜெகஜீவனை குடியரசு தலைவராகவோ, பின்னர் ஜனதா காலத்தில் பிரதமராகவோ ஆக்க இந்திய அரசியல் தயங்கிவிட்டதோ என்பதாக அமைந்தது. அவர் நேரு , ஜாகிர் ஹுசைன் , நாரயணன், அப்துல்கலாம், மன்மோகன் போல் அறிவுஜீவியாக இல்லாமல் இருந்திருக்கலாம். அரசியல் சாதுர்யத்தில், நடைமுறை சார்ந்த உத்தி முடிவுகள் எடுப்பதில் அவர் குறைந்தவராக இருந்திருக்கமாட்டார். கே ஆர் நாரயணன், அப்துல்கலாம் போன்றவர்களைவிட பெரும் அரசியல் பங்களிப்பை செய்திருந்தும் , அரசியல் உலகம் அவரை குடியரசுதலைவராக்காமல்

விட்டது. பிரணாப் விட கூடுதலான அரசியல் பங்களிப்பை அவரிடம் நாம் காணமுடியும்.

சரண் சிங், தேவகௌடா, வி பி சிங், குஜ்ரால், சந்திரசேகர் போன்றவர்கள் வரமுடிந்த பிரதமர் பதவிக்கும், ஜனதா சோதனையில் ஜெகஜீவன் வரமுடியாமல் போனது. அவரிடம் அவர் குடும்பத்தார்களிடம் அதிகார சொகுசு விருப்பார்வங்கள் இருந்திருக்கலாம். அவர் ஒரு போதும் டிக்டேடர் ஆகியிருக்க மாட்டார். விடுதலைக்கால மாண்புகளின் தன்மைகளை, ஜனநாயக பண்புகளை தவறவிட்டிருக்க மாட்டார் என்றே தோன்றுகிறது.

ஆங்காங்கே இடைவெளிகளையும் இட்டு நிரப்ப வேண்டிய தேடல்களையும் இந்த நூல் வரலாற்று மாணவர்களுக்கு வேலைகளாக கொடுத்திருப்பினும் சமகால அரசியலுக்கு , ஜெகஜீவன் வழியாக இந்திராணி அளித்துள்ள பங்களிப்பு என இந்த மைல்ஸ்டோன் புத்தகத்தைக் கருத முடியும்.

இந்திய அரசியல் உள் விளையாட்டுகள் , பதவிக்கான அரசியல் snake and ladderல் நடைபெறுபவை, பல்வேறு பிரச்சனைகளில் முடிவுகள் எப்படி எவர் தாக்கத்தில் எடுக்கப்படுகின்றன, அவற்றின் பாரதூர விளைவுகள் குறித்து ஏராள புத்தகங்கள் தேவைப்படுகின்றன. அப்படி ஒன்றாக பத்திரிகையாளர் நிரஜா சௌத்ரி எழுதிய ஒன்று how PM decides விவாதிக்கப்பட்டு வருகிறது. Insiders account என்கிற முடிந்தவரை நேர்மையான பதிவுகள் தான் இந்திய ஜனநாயகத்தை வலுப்படுத்தும் , புரிதலை மேம்படுத்த உதவக்கூடும்.

(dec 13 2023)

டாக்டர் சவீதா அம்பேத்கர்

may 26 2023

My Life with Dr Ambedkar -1

பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் துணைவியார் சவிதா அவர்கள் மராத்தியில் எழுதிய புத்தகம் கடந்த ஆண்டு ஆங்கிலத்தில் Babasaheb My Life with Dr Ambedkar என வெளிவந்தது. ஆங்கில மொழிபெயர்ப்பை நதீம் கான் செய்துள்ளார். Foreword ஒன்றை அம்பேத்கர் ஆய்வாளராக கருதப்படும் Scott Stroud எழுதியுள்ளார். திருமதி சவிதா அம்பேத்கர் 1990ல் மராத்தி ஆக்கத்திற்கு எழுதிய முன்னுரையிலிருந்து சில வரிகள் (in english)

we got married on 15 April 1948, and discipline and sense arrived in Dr Ambedkar's daily routine...

The Constitution of Independent India was altogether the creation of Dr Ambedkar. He worked on it for sixteen to eighteen hours every day at a stretch. He would say ' I am repaying my debt to the people of this soil'.

When I got married to Dr Ambedkar, I had simply one thing in mind- complete surrender, walk every step with him like his shadow for the sake of work he had undertaken and give him company in every sense of the word. I feel grateful that till his last moment I stayed with him like his shadow with body, mind and soul.

After Dr Ambedkar's passing away, the Dalit leaders of those times did not want any obstructions from the members of the Ambedkar family. Accordingly, they created a rift between Yeshwant and me...systematically spread poison in the Dalit community by conspiring to create suspicions against me related to Dr Ambedkar's death and keeping these suspicions alive..

This plot was put into place to have me thrown out of the political stream that Dr Ambedkar had intended for me..

These self serving Dalit leaders wanted to raise a storm against me so as to separate me from the community. It was for furthering this despicable effort that they raised the demand of getting the cause of Dr Ambedkar's death probed. The government accordingly investigated the matter and on 26th November, the then home minister of India, Pandit Govind Pant, declared in the House that Dr Ambedkar had died of natural causes..

Nobody can deny that the negative propaganda let loose by these Dalit leaders destroyed my image among dalit people. But by doing so, these people not only humiliated me, but also insulted their great, noble benefactor Dr Ambedkar.

...I became an MBBS in 1937 from Grant Medical college, Bombay. During those times, forget a Dalit woman, a woman belonging to even the Savarna becoming a

doctor was a rarity... The accusation raised against me began from the point of claiming that I was not even a doctor...it had become a matter of the integrity of the entire medical world, a number of enowned doctors and my colleagues in the profession suggested that I should file a defamation suit in the court, but I did no such thing.

may 27 2023

My Life with Dr Ambedkar சவீதா 2

அம்பேத்கருடன் சவீதா அவர்கள் வாழ்ந்த காலம் 9 ஆண்டுகள் என்பார். அம்பேத்கரின் இறுதிக்கால பந்தமது. 1953ல் அம்பேத்கருக்கு இதய நோய் தாக்குதல் வந்து அவர் மீண்டார். சவீதா அவரை மணம் செய்துகொள்ளும்போதே அம்பேத்கர் அவர்களுக்கு diabetes, neuritis, rheumatism, high BP உள்ளிட்ட பல உடல் அவஸ்தைகள் இருந்தன. அவற்றுடன் மல்லுகட்டித்தான் அவர் 15 மணிநேரம் தினம் உழைத்து வந்தார். சவீதா மீது திணிப்புகளை அவர் செய்ததில்லை என்கிறார் சவீதா.

சவீதாவும் அம்பேத்கருடன் புத்தம் தழுவினார். ஒரு விஷயத்தை அம்பேத்கர் அழுத்தமாகச் சொல்வாராம்- whatver one does, one should do after careful thinking.

கெளதம் புத்தர் தன் யசோதரைக்கு ஓர் அறிவுரை தந்தாராம்- one's refuge is within oneself. இதைச் சொல்லிவிட்டு சவீதா எழுதுகிறார் Is not then my role in Dr Ambedkar's life like hat of Yasodhara, in a sense?

சவீதா அம்பேத்கரின் கல்வி புலங்களை விவரித்துவிட்டு தான் பெற்ற அறிவை சமத்துவ சமூகம் படைக்க அவர் அர்ப்பணித்ததை பேசுகிறார்

Dr Ambedkar ploughed in all his learning, all his strength, his entire life for the upliftment of the depressed classes and to bring about equality in his country...The sacred and historical work he has done for the freedom of humankind makes him a jewel worthy of reverence not in India alone, but in the entire world...He was the person to awaken a sense of identity and self respect among depressed classes in India. Dr Ambedkar's historical work has no match not merely in India but inthe history of the world...

I have always felt blessed to have had the singular good fortune of becoming the wife of this great man of the epoch..

அம்பேத்கர் பெரும் சாகரம் என்றால் அதில் மிதந்த நீர்க்குமிழி நான் என சவீதா சொல்கிறார்.

கபிர் என்கிற பின்னொட்டைக் கொண்ட சரஸ்வத் பிராம்மண குடும்பத்தில் பிறந்தவர் சவீதா. முன்னோர்கள் ரத்னகிரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். தாய் ஜானகிபாய். தந்தை கிருஷ்ணராவ் விநாயகராவ் கபிர். தந்தை பம்பாய் மாகாண ’ஹெல்த்’ இலாகாவில்பணியாற்றியவர். சரஸ்வத் வகுப்பினர் பலர் பம்பாய்க்கு குடியேறியிருந்தனர். சவீதா குடும்பம் புனேவில் இருந்தது. அவருக்கு

பெற்றோர் வைத்த பெயர் சாரதா. ஹுசுர்பாக் பள்ளி, பரசுராம் கல்லூரி, பெர்குசான் கல்லூரி என படிப்பு தொடர்ந்தது. கல்லூரியில் விடுதியில் தங்கி படிக்க அக்காலத்திலேயே அவர் தந்தை அனுமதித்துள்ளார். விடுதி காப்பாளர் கிர்தனே. அவர் கணவனை இழந்தவர். புரட்சிகரமான சோசலிச தலைவர் நானாசாகேப் கோரேவுடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டு அவரை மறுமணம் புரிந்தார். அவர்கள் சந்தித்து பேசுவதை ஓரக்கண்களால் விடுதி மாணவிகள் பார்த்து ரசித்ததை சவீதா பதிவு செய்துள்ளார்.

பெர்குசானில் முதல் மாணவியாக வந்த சாராதாவிற்கு மெடிக்கல் கல்லூரியா இளங்கலை அறிவியல் துறை படிப்பா என்ற கேள்வி வந்தது. தந்தை டாக்டர் ஆகு எனச் சொன்னதை தட்டாமல் கிராண்ட் மெடிக்கல் கல்லூரி பம்பாயில் சாராதா சேர்ந்தார். குடும்பம் புனேவிலிருந்து பம்பாய் தாதர் பக்கம் வந்தாலும் விடுதி வாழ்க்கைதான் சாரதாவிற்கு. படிப்பில் முழு கவனத்துடன் டாக்டர் கனவு துரத்த கவனப்படுத்திக்கொண்டார் சாரதா.

அந்த மெடிக்கல் கல்லூரி மனிபவனுக்கு பக்கத்தில் இருக்கும் ஒன்று. அம்பேத்கர் அங்குதான் காந்தியை ஆகஸ்ட் 14, 1931ல் சந்திக்கிறார். அது பெரும் விவாதம் துவங்கிய நாளாகவும் போனது. முரண் எழுந்தது. அம்பேத்கர் திருமணத்திற்கு பின்னர் சவீதாவிடம் தன் வாழ்வின் பல்வேறு நிகழ்வுகளை அசைபோடுவது வழக்கமாக வைத்திருந்தாராம். அப்போது காந்தி சந்திப்பு பற்றியும், அம்பேத்கரை பாராமுகமாக முதலில் காந்தி இருந்தது பற்றியும் சொன்னதை சவீதா பதிவு செய்கிறார். அவர்களிடையே நடந்த விவாதத்தையும் , அம்பேத்கர் எதிர்வினையையும் சொல்கிறார்.

அம்பேத்கர் அவ்விவாதத்தின் இறுதியில் இப்படிச் சொல்லி செல்கிறார்.

We have no trust even in a Mahatma like you, therefore we are not going to depend on you. History bears evidence of the fact that Mahatmas are like passing illusions.

தன்னை ஒடுக்கப்பட்ட மனிதர்களுக்காக பாடுபடும் படித்த பிராம்மணர் என காந்தி நினைத்ததாக சவீதாவிடம் அம்பேத்கர் தெரிவித்தார் என்கிற பதிவையும் இதில் காண்கிறோம்.

nov 21 2024

My Life with Dr Ambedkar -3

"டாக்டர் அம்பேத்கருடன் எனது வாழ்க்கை" என்கிற டாக்டர் சவீதா (கபீர்) அவர்களின் நூல் குறித்து சில மாதங்களுக்கு முன்னர் இடுகைகள் செய்திருந்தேன்.

சவீதா அவர்கள் மராத்தியில் எழுதி, ஆங்கிலத்தில் நதீம்கான் அவர்களால் மொழி மாற்றம் செய்யப்பட்ட நூலது. பெங்குவின் 2022ல் ஆங்கில நூலைக் கொணர்ந்தனர். அம்பேத்கர் குறித்த ஆளுமைத் தேடல் என்கிற பக்கத்திற்கு இந்நூலும் துணை சேர்க்கும். பெருந்தலைவராக, 'அய்கான் 'ஆக, பேரறிஞராக, அரசியல் சமூகப்போராளியாக அவரை வர்ணிக்கக்கூடிய புத்தகங்களுடன், அவர் குறித்து அருகில் இருந்து பார்த்தவர்கள் செய்யக்கூடிய பதிவுகளில் அவரது அன்பு, கோபதாபம், பரிவு, எரிச்சல், பல்வேறு மனநிலைகள் - 'டெம்பரமெண்ட்' கொஞ்சம் நமக்குக் கிடைக்கும். தெய்வீக உயர் பீடத்திலிருந்து அல்லாமல், நம்மை போன்றே பல்வேறு ஆசாபாசாங்கள், ஆர்வ விழைவுகளின் இழுவைகளுக்கு இப்பெரியவர்கள் உள்ளானதை இவ்வகை பனுவல்கள் நமக்கு உணர்த்தும். அம்பேத்கர் இலக்கிய கிடங்கிற்கு , இந்த வகையில் சவீதா நூலும் தொண்டு செய்துள்ளதாக எடுத்துக்கொள்ளலாம்.

டாக்டர் கபீர் வேலை பார்த்த கிளினிக்கிற்கு அம்பேத்கர் வந்து போனதும், நண்பர் வீட்டில் கபீரை பார்த்து, பின்னர் பழக்கமானதும், இருவர் திருமணத்திற்கும் அழைத்துச் சென்ற நிகழ்வுகள். இருவரும் நேயத்துடன் பழகத்துவங்கிய 1948 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் எழுதிக்கொண்ட கடிதங்களிலிருந்து சில பகுதிகள், தொலைபேசி உரையடல்கள், நெருங்கிய தோழர்களுக்கு அம்பேத்கர் தன் திருமண முடிவை வெளிப்படுத்திய கடித சாரங்கள் இந்நூலின் ஆரம்ப பக்கங்களில் பேசப்பட்டிருக்கும்.

இந்தக் காலம் , நாடு பிரிவினைக்கு உள்ளான அவதி சூழ்ந்த மாதங்கள், காந்தி படுகொலை, அரசியல் அமைப்பு சட்ட அசெம்பிளி வேலைகள்- டாக்டர் அம்பேத்கர் வரைவுக்குழுவில் பெரும் பொறுப்பு, சட்ட அமைச்சர் பொறுப்பு போன்ற சூழல் நிறை மாதங்கள் எனலாம்.

சற்று மத்திய வயதில் , நேய வயப்படும் ஆண் பெண் உளவியலை, இதில் சொல்லப்பட்டுள்ள கடிதவரிகள் சில நமக்கு உணர்த்தலாம். மரத்தைச் சுற்றி பாட்டுப்பாடும் , கையைப் பிடித்துக்கொண்டு ஊர்

சுற்றும் வயதல்ல. பெரும் ஆளுமைக்கான எச்சரிக்கை உணர்வையும், பெண் மீது ஏற்பட்ட நேய உணர்வையும், உடல் நிலை கவனிக்க பொறுப்புடன் குடும்ப வாழ்விற்கு பெண் துணை தேவை என்கிற உணர்தலுடனும் வெளிப்படுத்த வேண்டிய கடினமான, அதேநேரத்தில் நேயக்காதலின் இழுப்பிற்கும் முகம் கொடுக்க வேண்டிய அழுத்தத்தில் டாக்டர் அம்பேத்கர் இருந்ததாகவே என் வாசிப்பு எனக்கு உணர்த்துகிறது.

சரி நீட்டாமல் அக்காலத்தில் அம்பேத்கர் எழுதிய கடிதங்களிலிருந்து சில வரிகள்

இக்கடிதம் மார்ச் 16, 1948ல் டெல்லியிலிருந்து பாவ்ராவ் கெய்க்வாடிற்கு டாக்டர் அம்பேத்கரால் எழுதப்பட்டுள்ளது.

"…..The doctor says that for me the choice is between marriage and early death……A woman to be my wife must be educated, must be a medical practitioner and must be good at cooking. It would be impossible in our community to find a woman who could combine the three qualifications and also suit my age..

My life has been so solitary that I have had no contacts with caste Hindu men and much less with caste Hindu women. Fortunately, I have been able to find one. She comes from the Saraswat Brahmin community. The marriage at present will take place in Delhi on the 15 th April . Keep this confidential. "

ஏன் அம்பேத்கர் பிறந்த ஏப் 14ல் வைத்துக்கொள்ளக்கூடாது என சவீதா எழுப்பிய சந்தேகத்திற்கு அம்பேத்கர் தன் பதில் மூலம் தெளிவு படுத்துகிறார். அம்பேத்கரின் வரிகள்

"…you asked me why 15th and why not 14th. I fixed 15th because it is a Thursday and Thursday for me is a very shubh din- an auspicious day. The only thing in favour of the 14th is that it is my official date of birth. Different astrologers have given different date as my birth dates. Some have given 14th April, others 17th April, others 15th May etc. in this state of uncertainty, I prefer Thursday, which my experience shows to be my shubh din"

திருமணம் ஆனதை அறிந்த படேல் வாழ்த்து செய்தி அனுப்பினார். படேலின் செய்தியில் காந்தி இருந்தால் தன் ஆசியை தந்திருப்பார் என தெரிவித்திருந்தார்.

" I learned from the papers about your marriage which is coming off today (15-4-1948). Please accept my warmest congratulations and best wishes for a happy married life. I am sure, if Bapu were alive , he would have given you his blessings "

அம்பேத்கரும் இருவர் சார்பிலும் நன்றி தெரிவித்து படேலுக்கு பதில் எழுதினார். அதில் மறக்காமல் படேல் உடல் நலம் பற்றியும் சொல்லிவிட்டு, ஆமாம் காந்தி ஆசியை தந்திருப்பார் என ஆமோதித்து எழுதியிருப்பார்.

"…I agree that Bapu, if he had been alive, would have blessed it. I hope by now you would have completely recovered".

பின்னர் சவீதாவுடன் படேலை உடல்நலம் விசாரிக்க, அம்பேத்கர் படேல் வீட்டிற்கும் சென்றார். படுக்கையில் இருந்த படேல், சவீதாவை அருகில் அமர வைத்துகொண்டு , மகளே துணிச்சலான செயலை செய்துள்ளாய்- பாபு இந்த புரட்சிகர நிகழ்வை பார்க்க நம்மோடு இல்லாமல் போய்விட்டார். படேலின் அன்பு வரிகள்

" Daughter, you have shown great courage by marriage Doctor Saheb . If this auspicious even had happened in Bapuji's presence, it would have been a greater reason for joy. I feel sad that Bapu is not with us to witness this revolutionary event "

மேற்கண்ட செய்திகள் Babasaheb- My Life with Dr Ambedkar நூலின் முதல் நூறு பக்கங்களில் நமக்கு தரப்பட்டுள்ளன். வாய்ப்புள்ளோர் ஏறக்குறைய 340 பக்கங்கள் உள்ள இந்த நூலை வாசித்துப்பார்க்கலாம்.

21-11-2024

24-11-2024

My Life with Ambedkar -4

டாக்டர் அம்பேத்கர் மரணம் சர்ச்சைகள்

டாக்டர் அம்பேத்கர் டிசம்பர் 4 , 1956 அன்று சிறிது நேரம், தன் உடல் நிலையை பொருட்படுத்தாமல் ராஜ்ய சபா கூட்டத்திற்கு சென்று வந்தார். அது தான் அவரது இறுதி நாடாளுமன்ற பங்கேற்பாகவும் அமைந்தது.

டிசம்பர் 5 அன்றும் , களைப்பு இருந்தாலும் அவர் வேலை செய்கிறார். புத்தரும் தம்மமும் நூலுக்கான முன்னீட்டை சரி செய்து செப்பனிடுகிறார். சோசலிஸ்ட் எஸ் எம் ஜோஷிக்கான கடிதத்தை சரி பார்க்கிறார். பர்மா அரசாங்கத்திற்கு எழுதியதையும் இறுதிப்படுத்துகிறார். ஆனால் அன்று இரவு தான் இப்பூவுலகில் அவர் உயிருடன் இருக்கப்போகும் கடைசி இரவு என்றானது. அவர் படுக்கையிலேயே உயிர் பிரியும் என எவரும் நினைத்திருக்க மாட்டார்.

டிசம்பர் 6 காலை 7 மணிக்கு மேல் தான் , அவரது துணவியார் டாக்டர் சவீதா, தலையணை மேல் கால் வைத்து அசையாமல் அம்பேத்கர் படுத்திருப்பதை உணர்கிறார். அவரை இயற்கை அசையாமல் செய்துவிட்டது என்பதை அறிந்து கூக்குரலிடுகிறார். உதவியாளர் சுதாமா மட்டுமே வீட்டில் அப்போது. சமாளித்த நிலையில் செய்தி வெளி உலகிற்கு அனுப்பப்படுகிறது. நேரு உட்பட பலரும் வந்து அஞ்சலி செலுத்துகின்றனர். ஜெகஜீவன்ராம் , உடலை இறுதி சடங்கிற்கு பம்பாய் எடுத்துச் செல்ல உதவுகிறார். மக்கள் பெரு வெள்ளத்தில் புத்த மத முறைப்படி அவருக்கான இறுதி நிகழ்வுகள் நடை பெறுகின்றன.

அம்பேத்கர் அஞ்சியபடியே மகன் யஷ்வந்திற்கும், மனைவி சவிதாவிற்குமான முரண் நீதி மன்ற வளாகம் சென்றது. அம்பேத்கரை அறிந்த நீதிமான்கள் கபூர் போன்றவர் சமரசம் செய்ய முயற்சித்தனர். அம்பேத்கர் வாழ்ந்த பங்களா சீல் வைக்கப்படும் நிலை உருவானது. அவரது புத்தக அறை சீலிடப்பட்ட துயரம் நடந்தேறியது. அம்பேத்கர் இறுதியாக உயிர் துறந்த அலிப்பூர் சாலை இடம் நினைவகமாக மாற்றப்படாமல் போன குறையை டாக்டர் சவீதா தனது நூலில் சொல்கிறார்.

“ Try to bring pressure and get at least the room where Saheb passed away , because it has historical importance. But nobody listened to my appeal. Nobody was bothered even the tiniest”

அம்பேத்கர் கட்டிய இயக்கத் தலைமை எவரிடம் என்பது இயற்கையான கேள்வியானது. சவீதா போட்டியாளாராகி விடக்கூடாது என்பதற்கான வேலைகள் நடந்தன. அம்பேத்கர் மரணம் குறித்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. சவீதா மீதான தாக்குதல்கள் எழலாயின. 19 எம்பி க்கள் கூட்டாக நேரு அரசாங்கத்திற்கு கடிதம் எழுதினர். அம்பேத்கர் மரணம் குறித்து விசாரணை கோரினர். இதன் நகலை என்னால் பார்க்க முடியவில்லை.

தமிழகத்தில் பெரியார் தன் சந்தேகத்தை இவ்வாறு எழுதியிருந்தார். விடுதலை 20-12-1956ல்

" ..அம்பேத்கர் மரணமும் சந்தேகப்படத்தக்க நிலையில் உள்ளது. மூன்று லட்சம் பேரை இந்து மதத்தில் இருந்து மாற்றியுள்ளார். 16 ஆம் தேதியன்று ஏதோ 10 லட்சம் பேரை மாற்றுவதற்கு தயாராக இருந்தார் என்கின்றனர். இதை எந்த பார்ப்பன எந்த இந்து மகாசபைக் காரன் பொறுத்துக்கொண்டு இருப்பான்? காரியம் ஆவது ஒன்றும் இல்லாவிட்டாலும் இந்து மதம் என்பதற்கு பலம் குறைகிறதே , அவன் பொறுப்பானா? ஏதோ அனாதை சாக்காடு போலச் செய்துவிட்டார்களே? கவர்மண்டில் இது பற்றி விசாரித்து எழுத வேண்டாமா? எப்படி செத்தார்? என்ன வியாதி? யார் யார் கூட இருந்தார்கள்? மனைவி எங்கு இருந்தார்? …யார் ஆகாரம் கொடுத்தார்கள்? இதெல்லாம் தெரிய வேண்டாமா?.."

விடுதலை 29-12-1956ல்

" …அம்பேத்கர் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டார் என்பதாக அவரது மகன் டில்லி பார்லிமெண்ட் முன்பாக கூவி அழுதிருக்கிறார். அதை யாரும் லட்சியம் செய்யவில்லை.அவர் உயிர் போகும்போது பக்கத்தில் இல்லாத மனைவியும் அதைப்பற்றி கவலைப்பட்டதாக தெரியவில்லை. அம்பேத்கர் சடலத்தை வைத்தியர்கள் பரீட்சித்துப் பார்த்ததாக செய்தி தினத்தந்தியில் வெளியாகியது என்றாலும் , பிறகு அதைப் பற்றி ஒரு சேதியும் காணப்படவில்லை.

இப்போது அம்பேத்கரின் மகனுக்கும், அம்பேத்கரின் இளைய மனைவி பார்ப்பனத்தி அம்மாளுக்கும் அம்பேத்கருடைய சொத்தைப் பற்றி தகராறு ஏற்பட்டு , வழக்காடிக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அம்பேத்கர் மகன் இப்போது அனாதையாய் இருக்கிறார்…"

அரசாங்க விசாரணை , அதன் முடிவு தெரிவிக்கப்பட்ட பின்னரும் பெரியார் தன் கருத்தை மாற்றிக்கொண்டதாக தெரியவில்லை. அப்படி

ஒரு விசாரணை நடந்ததாக அவர் பேசினாரா என்று கூட தெரிந்துகொள்ள முடியவில்லை.

விடுதலை 21-5-1959ல்

“ ஒப்பற்ற மேதையானவர் இறந்தவுடன் நான் தான் எழுதினேன். காந்தியாரை கொன்றது போலவே அம்பேத்கரையும் கொன்றிருக்கிறார்கள் என்று. இரவு 10 மணிக்கு சாப்பிட்டு நல்ல முறையில் நல்ல உடல் நிலையில் படுத்தவர். காலையில் 6 மணிக்கு படுக்கையில் பிணமாகக் கிடந்தார் என்றால் என்ன அர்த்தம்? இது பற்றி கேட்பார் இல்லை. அவர் மகன் டில்லியில் ஏதோ சத்தம் போட்டார். அரசாங்கமோ வேறு யாருமோ பொருட்படுத்தவில்லை. அவர் கூப்பாடு கிணற்றில் போட்ட கல் போல் ஆகிவிட்டது.”

1961 மே 4 விடுதலையையிலும் அம்பேத்கரும் , காந்தியைப் போலவே பார்ப்பன சூழ்ச்சியால் கொல்லப்பட்டார் என பெரியார் சொல்வதை காண்கிறோம். 1966 ஏப்ரல் 14 விடுதலையிலும் பெரியார் அதே கருத்தை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம்.

சரி இனி அரசாங்கம் என்ன சொல்லியது எனப் பார்க்கலாம்.

உள்துறை பொறுப்பில் ஜி பி பந்த் இருந்தார். அரசாங்கம் சார்பில் கமிஷனர் திரு சாக்சேனா அவர்களை விசாரணை அதிகாரியாக போட்டனர். சாவில் மர்மம் ஏதும் இல்லை, இயற்கை மரணம்தான் என்கிற விசாரணை முடிவை பந்த் அவர்கள் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

திரு பி சி காம்ளே டிசம்பர் 9 1957 அன்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். உள்துறை அமைச்சர் பந்த் கீழ்கண்ட பதிலை தந்தார்.

“ I believe that it will not be appropriate to place the confidential report submitted by Dy police commissioner, Delhi, before the house. However I wish to tell the Honourable members that the police officer who carefully conducted the Inquiry and admitted the medical evidence has arrived at the conclusion that it has been proved without any scope for doubt that Dr Ambedkar’s death occurred because of natural circumstances.

Hence there is no evidence available to suspect any kind of foul play. The DIG of police has also recorded the evidence of the Bombay cardiologists Dr Tirodkar and Dr Tulpule

நாடாளுமன்றத்தில் பி கே கெய்க்வாட் எவ்வளவு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர் எனக் கேள்வி எழுப்பினார்.

பந்த் பதிலில் A number of Members and a few other persons besides என பதில் தந்தார்.

நவுச்சர் பரூச்சா எழுப்பிய கேள்வி அறிக்கையை வைப்பதில் என்ன தடை என்பதாக இருந்தது.

பந்த் பதில் Because police reports are not made public.

பரூச்சா ஏன் இதில் விதிவிலக்கு கூடாது என தொடர்ந்து கேள்வி எழுப்புகிறார்.

பந்த் பதிலாக It will not be proper to do so because there are Members of this House here and other witnesses. When the police officer presents his report, he uses his own language regarding the evidence presented. I have placed before you the basic things. Anybody who looks at it with a realistic non partisan perspective will be convinced that there is no doubt at all about the real reasons that caused the death.

இந்த விவாதத்தில் பியாரிலால் சகோதரி , காந்தியர் டாக்டர் சுசிலா நய்யாரும் பங்கேற்றுள்ளார். சுசிலா எழுப்பிய கேள்வியும் பந்த் பதிலும்..

Sushila Nayyar : Dr Ambedkar had been ill since a long time. His death was natural and was in normal circumstances, then why was there an enquiry of his death ?

G B Pant : It was not necessary that the government should entertain the request for enquiry. But 19 Honourable Members of the Lok Sabha requested in writing for the enquiry and we felt to go into the enquiry to honour the request of Members of the House.

அம்பேத்கர் அவர்கள் மறைந்து 68 ஆண்டுகள் ஆகிவிட்டன. 19 எம்பிக்கள் கடிதம், அரசாங்கம் போட்ட விசாரணை கமிட்டி உத்தரவு, விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் வாக்கு மூலம், டாக்டர்களின் முழு அறிக்கை, இறுதியாக விசாரணை அதிகாரியின் அறிக்கை என அனைத்தும் ஆவணமாக தொகுக்கப்பட்டு , பொது வெளியில் இருப்பது வரலாற்று ஆரோக்கியத்திற்கு துணையாக இருக்கும். இது தொடர்பாக எவராவது விரிவாக எழுதி பேசியுள்ளனரா என எனக்குத் தெரியவில்லை. முழு ஆவணம் பொது வெளிக்கு அரசாங்கத்தால் வைக்கப்படுவது நலம். நேதாஜி பைல்ஸ் கொஞ்சம் வெளிப்படுத்தப்படவில்லையா?

சவீதா அவர்களுக்கு நேருவாலும், இந்திராவாலும் ராஜ்ய சபா உறுப்பினராக வாய்ப்பு கேட்கப்பட்டது என்றும், அதை தான் மறுத்து விட்டதாகவும் சவீதா தன் நூலில் பதிவு செய்துள்ளார்.

அம்பேத்கரை திருமணம் செய்த போது, சவீதா தன் மருத்துவ பணியை ராஜினாமா செய்துவிட்டார். அம்பேத்கர் மரணத்திற்குப் பின்னர் நேரு சவீதாவை அரசாங்க மருத்துவ மனை ஒன்றில் மெடிக்கல் ஆபிசராக அமர்த்தி துணை நின்றார்.

நேதாஜி குடும்பத்திற்கும் , நேரு உதவி செய்ததைப் பார்க்கிறோம். நேருவின் இந்த மாதிரியான 'மென் மனிதாபிமான உணர்வுகள்' ஏராளம் தொகுக்கப்படாமல் இருக்கலாம்.

ஆதார நூல்கள்

My Life with Ambedkar by Savita Ambedkar

பெரியார்- டாக்டர் அம்பேத்கர் நட்புறவு. தொகுப்பு கி வீரமணி

24-11-2024

june 11 2025

Great Sacrifice of Maisaheb Ambedkar

சவீதா அம்பேத்கர் அவர்கள் எழுதிய அம்பேத்கர் (My Life with Dr Ambedkar) படித்தவுடன் சில பதிவுகளை செய்திருந்தேன். அந்த நூல் ஓரளவு பேசப்பட்ட நூல். டெல்தும்டே உட்பட ஆய்வாளர்கள் கூட சில இடங்களில் reference ஆக எடுத்துக்கொண்ட நூல் கூட.

அதை மனதில் வைத்துக்கொண்டு , பேரா பி வி சுகதேவ் எழுதிய நூலான Great Sacrifice of Maisaheb Ambedkar நூலை வாசிக்கையில் பெரும் ஏமாற்றமே கிடைத்தது. நூலில் சற்று வம்புகள் இருக்கலாம். மேம்பட்ட வாத பிரதிவாதங்கள் கட்டப்படலாம். நூல் முழுவதுமே 'அந்த ஆள் எழுதியது, இந்த ஆள் எழுதியது பொய்- அவதூறு- மோசம்' என 230க்கும் மேற்பட்ட பக்கங்கள் வரிகள் சென்றால், அந்நூலை என்னவென எழுதுவது எனத் தெரியவில்லை.

அம்பேத்கர் மறைவிற்கு பின்னர், அவருடன் ஏதோவொருவகையில் நெருக்கமாக இருந்தவர்கள், அன்றாடம் சில ஆண்டுகளாவது அருகில் இருந்து பார்த்து எழுதக்கூடியவர்கள் எனச் சிலர், ஒருவருக்கு ஒருவர் மோசம் என எழுதி முடித்துவிட்டால் வாசகருக்கோ, அம்பேத்கர் குறித்து அறுபடா செய்திகளை புரிந்து கொள்ள விழையும் மாணவருக்கோ என்ன கிடைக்கும்?

டாக்டர் சவீதா குறித்த விசாரணை போல், ஒவ்வொருவரும் அவரை எப்படி கூண்டில் ஏற்றப்பார்த்தார்கள், அவ்வளவு பேரும் பொய்யர்கள் எனச் சொல்வதற்காக இந்நூலை இந்த ஆசிரியர் எழுதியிருப்பதைக் காணமுடிகிறது. மிக அற்பமானவை, குழந்தைத்தனமானவை எனக் கருத முடிந்த அம்சங்கள் கூட trigger செய்யப்பட்டு ஒருவருக்கு ஒருவர் காயப்படுத்திக்கொள்ள முடியும் என்பதற்கு இந்நூலும் ஒரு சாட்சி.

இந்த நூலை டாக்டர் சவீதா அவர்களின் வாழ்க்கை வரலாறாக இருக்குமோ என நினைத்து வாங்கி ஏமாந்தேன். அதைத் தேடி செய்திருந்தால் நன்றாகக் கூட இருந்திருக்கும். ஆய்வுலகு சற்றும் பொருட்படுத்த முடியா பரஸ்பர முத்திரை குத்தி கீழே தள்ளுவதின் தொகுப்பு போல இந்நூல் எனக்குப் பட்டது. இந்திராணி ஜெகஜீவன் ராமின் நூல் சிறப்பு எனலாம். டாக்டர் சவீதாவும் தன் நோக்கில் அம்பேத்கரை காட்டியிருந்தார் எனலாம்.

இந்நூலில் முதல் இயல், டாக்டர் சவீதா எழுதிய அம்பேத்கர் நூலை 50 பக்கங்களுக்கு summarise செய்யப்பட்ட ஒன்று. அடுத்த இயல் Gang of Four என சுகதேவால் சித்தரிக்கப்பட்டுள்ளவர்களின் எழுத்துக்கள் குறித்த

விளாசல். இந்த நால்வர் நானக்சந்த்சட்டு, கயர்மோட், சோகன்லால் சாஸ்திரி, சங்கரானந் சாஸ்திரி.

இவர்கள் அம்பேத்கர் மரணத்தை கொலையாக, சவீதா - அம்பேத்கர் திருமணத்தை சதியாக பார்த்து எழுதியுள்ளவற்றை சுகதேவ மறுக்கும் பக்கங்கள். அந்த லேடி, she என அவர்கள் எழுதினால் கூட பேரா சுகதேவிற்கு கோபம் வருகிறது. அம்பேத்கர் god எனில் Maisaheb Goddess எனச் சொல்லும் அளவிற்கு சில இடங்களில் வரிகள் .. அவர்கள் இருவரின் உறவும் சூரியன்- பூமி போன்றது எனும் வரிகள்.

இந்நூல் ஒரு விஷயத்தை மய்யமாக வைத்து சுற்றுகிறது. ரட்டு, சாஸ்திரி - சாஸ்திரி, கயர்மோட் போன்றவர்கள் அம்பேத்கர் குறித்து மிக உயர்வான பதிவுகளை செய்யும்போது, அவரது துணைவியாரான சவிதா குறித்து ஏன் அவதூறுகளை எழுத வேண்டும்… வேறுபாடுகள் வளப்படுத்துவதற்கு உதவினால் சரி..ஆனால் சந்தேகங்களை அள்ளித் தெளித்து எதையும் நிருபிக்க வேண்டிய பொறுப்பின்றி எழுதுவது சரியா இந்நூல் கேள்வி எழுப்புவதாக வைத்துக்கொள்ளலாம். ரட்டுவோ, சாஸ்திரிகளோ, சுகதேவோ அப்படியே தங்களிடம் ஆவணங்கள்- original letters என ஏதாவது வைத்திருந்து அப்படியே அதை வெளியிட்டு விட்டால், வாசகன் பார்த்துக்கொள்வான்.

டாக்டர் சவீதா குறித்த சர்ச்சைகளில் சிக்கி பரஸ்பரம் குற்றச் சாட்டுகளை அடுக்கிக்கொள்ளாமல், அவரவர் வசம் இருக்கிறவற்றை தங்கள் நூல்களில் சேர்த்து தருவது நலமாக பயன்பட்டிருக்கும். அம்பேத்கர் இலக்கிய கிடங்கு இன்னும் மிக அதிகமாக நிரம்ப வேண்டியிருக்கலாம். அவர் குறித்த பிரமிப்பூட்டும், விமர்சனவாயிலை திறக்கும் எழுத்துக்கள் மேலும் மேலும் வரவேண்டிய அவசியம் இருக்கலாம். வெறும் புகழ்பாடலாக இல்லாமல், நம்முடன் வாழ்ந்த சக மனிதரின் பல்வேறு குணாதிசயங்களை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தக்கூடிய எழுத்துக்களாக அவை மேலும் மேலும் வரவேண்டிய அவசியம் இருக்கிறது.ஆய்வுலகில் அரசியல் சாய்வு,வேறு சாய்வுகள் இருக்கலாம். ஆனால் முழுமையாக bias ஆக ஆய்வாளர்கள் இருக்க முடியாது. இருக்கவும் கூடாது.

வாங்கி ஏமாந்த நூல்களில் இதுவும் ஒன்று

11-6-2025